**OS. No. 49 /2022**

P.W.2 - பிரபாகரன்

தேதி: 15.12.2023

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்தன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி எந்த வேலைக்கும் போவதில்லை. நான் 8/42 ஏ என்ற எண்ணில் உள்ள வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கண்டுள்ள கையொப்பம் மற்றும் விலாசம் என்னுடையது தான் என்றால் அதில் கண்டுள்ள விலாசம் என்னுடையது தான். ஆனால் கையொப்பம் என்னுடையது அல்ல. 26.10.2021ம் தேதி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாதி பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் வரைவோலையாக கொடுக்கப்பட்டது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கிரைய ஒப்பந்த தேதியில் ரூ.10,00,000/-த்திற்கு வரைவோலையாக கொடுத்தோம். 26.10.2021ம் தேதி எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பேசினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். கிரையம் ரூ.17,00,000/- பேசினார்கள். 26.10.2021ம் தேதி பேச்சு வார்த்தை செய்து வரைவோலை கொடுக்கப்பட்டது. அன்றைய தேதியில் ஆவணம் எழுதவில்லை. எனக்கு தாவா சொத்தின் விஸ்தீரணம், புல எண்கள் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதி மற்றும் பிரதிவாதி எத்தனை கையெழுத்துக்கள் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் கையொப்பம் போட்டார்கள். அவர்கள் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிம் கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க சொல்லி வாதி நேரடியாக கேடடதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆனால் வாதி எந்த தேதியில் போய் கேட்டார் என்று எனக்கு தெரியாது. வாதி பிரதிவாதிக்கு கொடுத்த கடனை அசலும்

வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டார் என்றும் நாங்கள் ஆவணத்தை ரத்து செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்து விலையுயர்ந்தது என்பதால் அந்த சொத்தை அபகரிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH